# முல்லை பெரியாறு அணை பிரச்சனை தொடர்பாக சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய பதில் உரை

முதல் அமைச்சர் கலைஞர் :— எதிர்க் கட்சியின் துணைத் தலைவர், திரு. பன்னீர்செல்வம் அவர்கள் எதை விரும்பினாரோ, அது இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது. முல்லைப் பெரியார் நிறைவேறுகிறதோ, இல்லையோ அந்தப் பிரச்சினை குறித்து இன்றைக்கு விவாதித்தே தீர வேண்டும் என்று அவர்கள் விரும்பியது, அவர் அறியாமல், நாம் அறியாமல் பொதுவாக நிறைவேறிவிட்ட மகிழ்ச்சி எனக்கும் இருக்கிறது, மாமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது.

ஏனென்றால் இந்தப் பிரச்சினையில் இன்றுள்ள தமிழக அரசு இன்று நேற்றல்ல, கடந்த காலத்தில், பல ஆண்டுகளுக்கு முன்பு உரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதும், கேரளத்தை ஆண்ட பல்வேறு முதல் அமைச்சர்களை யெல்லாம் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். முல்லைப்பெரியார் பிரச்சினைக்காக மாத்திரமல்ல, நீராறு பிரச்சினை, பரம்பிக்குளம் ஆளியாறு பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளில் கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் உள்ள தாவாக்களை பேசித் தீர்த்திருக் கிறோம். கோவை மாநகரத்திற்கு சிறுவாணி தண்ணீர் வேண்டும் என்ற கோரிக்கையை அன்றைய கேரளத்து முதலமைச்சர் அச்சுதமேனன் ஏற்று அவரே கோவைக்கு வந்து சிறுவாணி தண்ணீர் தொடக்க விழாவினை நடத்தி வைத்தார் என்பதெல்லாம் கேரள மாநிலத்திற்கும் தமிழ் மாநிலத்திற்கும் உள்ள உறவுகளை, தொடர்புகளை எடுத்துச் சொல்லுகின்ற சரித்திரக் குறிப்பு களாகும்.

இந்தச் சரித்திரக் குறிப்புகளைத் தான் அன்று தொட்டு பழைய நாளிலேயிருந்து எந்த அளவிற்கு இரு மாநிலங்களும் பெற்றிருக்கிறது என்பதை நான் டெல்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது நினைவூட்டினேன். அப்படி

நினைவூட்டியதற்குக் காரணம், கேரள மாநில மக்களும், தமிழ் மாநில மக்க ளும் சகோதரர்களாக வாழ வேண்டும், ஒருமைப்பாடு போற்ற வேண்டும், ஒற்றுமை நிலவ வேண்டும், ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்ச்சியோ, கசப்புணர்ச்சியோ ஏற்பட்டு விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் நான் அத்தகைய கருத்துக்களை அன்றைக்கு எடுத்து வைத்தேன்.

அந்தப் பேச்சுவார்த்தை இங்கே வீற்றிருக்கின்ற உங்களுடைய அனுமதியின் பேரில் தான் நடைபெற்றது என்பதை நீங்களே நன்கறிவீர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் தமிழ்நாட்டிலே உள்ள இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றி ருக்கின்ற கட்சிகள், இடம் பெறாத கட்சிகளின் தலைவர்களை யெல்லாம் அழைத்துப் பேசி அவர்களுடைய அன்பான அணுகுமுறை, அறிவுரை ஆகிய வற்றை ஏற்றுக் கொண்டு தான் ஒரு தீர்மானத்தை 23.10.2006 அன்று தமிழக அரசின் சார்பாக அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தை இப்போது நினைவுபடுத்திக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

தீ ர் மா ன ம்.

“முல்லை பெரியாறு பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக எடுத்துவைத்த நியாயங்களை ஏற்றுக்கொண்டு உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு முன் வராத கேரள அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி, உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக, மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இக்கூட்டம் இணக்கம் தெரிவிக்கிறது; என்றாலும் கூட

அதிலும் உரிய பலன் கிடைக்காதபட்சத்தில் மீண்டும் உடனடியாக உச்ச நீதி மன்றத்தையே அணுகி உச்ச நீதி மன்றம் 27–2–2006இல் பிறப்பித்த உத்தரவான அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பதையும்; அணையைப் பலப்படுத்தும்

எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளும்போது கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிப்பதுடன், தமிழக அரசுக்கு கேரள அரசு அதிகாரிகள் எந்தவித இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது என்பதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உத்திரவளிக்குமாறு முறையீடு செய்து கொள்வதென்றும்; அத்தகைய உச்ச நீதி மன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. "

என்று தான் அன்றைக்குத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். இந்தத் தீர்மானத்தை மூன்று பிரிவாகப் பிரித்துப் பார்த்தால், பேச்சுவார்த்தை நடத்த உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி இணக்கம் தெரிவித்து ஒரு பகுதி. அதிலே உரிய பலன் ஒருவேளை கிடைக்காவிட்டால் உடனடியாக உச்ச நீதி மன்றத்தையே அணுகி, அவர்கள் பிறப்பித்த உத்தரவாதமான 142 அடி என்று உயர்த்திக் கொள்ள உத்தரவுகேட்பது ஒரு பகுதி, உச்ச நீதி மன்றம் அத்தகைய உத்தரவை அளிக்கும் போது அந்த உத்தரவை அமல்படுத்த மத்திய அரசு நமக்கு ஒத்துழைப்பு தருவது. இந்த மூன்று பகுதியாக இந்தத் தீர்மானத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் நாங்கள் அந்தப் பேச்சுவார்த்தையை முடித்து விட்டு, சென்னைக்கு வருவதற்குள்ளாக, சென்னையிலிருந்து வெளி வரும் சில பத்திரிகைகளில், சில கட்சித் தலைவர்கள் சொன்னதாக அல்லது பத்திரிகையின் கருத்தாக, "பேச்சு வார்த்தை தோல்வி" என்று செய்தி வெளியிடப்பட்டது. உள்ளபடியே அது தோல்வி அல்ல. மீண்டும் ஒரு முறை முதலமைச்சர்கள் அல்லாமல் மற்றபடி அந்த மாநிலத் தின் பாசன அமைச்சர், நம்முடைய மாநிலத்தின் பொதுப்பணித்துறை அமைச்சர் இருவரும் கலந்து பேசி, பொறியாளர்களும் கலந்து பேசி, சில புள்ளி விவரங்களை, சில தகவல்களை, சில விவரங்களை அவர்கள் தந்திடுவதின் அடிப்படையில் அந்தப் பேச்சுவார்த்தையை இரண்டாவது கட்டமாக நடத்துவது என்று முடிவு செய்தது;

என்பதால் அந்த முதல் பேச்சுவார்த்தையே தோல்வி அடைந்து விட்டது என்று பொருள் அல்ல. அப்படி யாரும் பொருள் கொள்ளக் கூடாது.

முதல் பேச்சுவார்த்தை நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை, நானும், கேரள முதல்வர் திரு. அச்சுதானந்தனும் நடத்திய பேச்சுவார்த்தை, சில விவரங்களைச் சேகரிப்பதற்கு முன்னோடியாக ஒரு தூண்டுதலாக அமைந்ததே தவிர வேறல்ல. அதுவே முற்றுப் பெற்ற பேச்சுவார்த்தை அல்ல. அது முற்றுப்பெற்ற பேச்சுவார்த்தை என்றால், அடுத்த கட்டம் உச்ச நீதி மன்றத்திற்குத் தான் நாம் சென்றிருக்க வேண்டும். உச்ச நீதி மன்றத்திற்குச் செல்வதற்கு முன்பு நம்முடைய அரசின் பொதுப்பணித் துறை அமைச்சரையும், அதிகாரிகளையும், பொறியாளர்களையும் அதைப் போல கேரள அரசின் பொதுப் பணித் துறை அமைச்சரையும், அதிகாரிகளையும், பொறியாளர் களையும் வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி என்னென்ன விவரங்கள், எவ்வளவு தண்ணீர் ஒவ்வொரு ஆண்டும் வருகிறது, எவ்வளவு தண்ணீர் இங்கே முல்லைப் பெரியாறில் விடப்படுகிறது, அதை தமிழகம் எந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொள்கிறது, எவ்வளவு நிலம், எவ்வளவு கழனி இதன் மூலம் பயன் பெறுகிறது என்பது போன்ற புள்ளி விவரங்கள் நம்முடைய பேச்சுவார்த்தைக்கு உதவு வதற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத் தான் அன்றைய தினம் ஒத்தி வைக்கப் பட்டு இன்னொரு நாள் குறிப்பிடப்பட்டது.

அந்தக் கருத்தையும் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் தான் வெளியிட்டு அன்றைக்கு பேச்சுவார்த்தையை ஒத்தி வைத்தார். பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அது முடிந்து விட்டது, முறிந்து விட்டது, தோல்வி அடைந்து விட்டது என்று சொன்னது தவறான வாதமாகும். இப்போதும் நாங்கள் அந்தப் பேச்சுவார்த்தையைத் தொடருவதென்றால் நானும் கேரளத்தின் முதலமைச்சர் திரு. அச்சுதானந்தன் அவர்களும் மீண்டும் ஒரு முறை உட்கார்ந்து பேசுவதென்பதல்ல. நம்முடைய பொறியாளர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர்களும் கலந்து பேசி அவர்கள் ஜாடை காட்டினால் தான் இப்போது நீங்கள் மீண்டும் பேசினால், வெற்றி

அடையக் கூடும் என்று அவர்கள் சொன்னால் தான், அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடைபெறுமே அல்லாமல், இல்லாவிட்டால் அடுத்த பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு தயாராக இருக்காது என்பதை இந்த மாமன்றத்திலே நான் உங்களுக்கு உறுதி அளித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி)

இருக்காது என்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டால், நாம் நீதி மன்றத்தைத் தான் நாட வேண்டும். உச்ச நீதி மன்றம் நல்ல தீர்ப்பை ஏற்கனவே அளித்து அது நடுநிலையிலே சிந்திக்கின்ற மன்றம், தீர்ப்பளிக்கின்ற மன்றம் என்பதை நிலைநாட்டியிருக்கின்றது. எனவே உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புக்குத் தான் நாம் காத்திருக்கின்றோம். அதற்கிடையிலே உச்ச நீதி மன்றத்தின் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள், இந்த அணை தாங்கும், பூகம்பமே வந்தால் கூடத் தாங்கும் என்று உச்ச நீதி மன்றம் சொல்கிறது. ஆனால் கேரள அரசு மறுக்கின்றது. பூகம்பம் வந்தால் தாங்கும் என் பதெல்லாம் கேலிக் கூத்து என்று கேரள அரசு சொல்கின்றது. உச்ச நீதி மன்றத்துக்கு மேலும் நம்முடைய ஆதாரங்களைத் தந்து, உச்ச நீதி மன்றத்தைப் பேச வைக்க நல்ல வலுவான ஆதாரங்களைத் தருவதற்காகத் தான் இந்த இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையை நாம் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அதை நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் வேண்டாம் என்று சொல்லி, நாளைக்கே ஒரு அறிக்கை கொடுப்பார்களானால் அதையேற்று நாளை மறு நாளே உச்ச நீதி மன்றத்திற்குச் செல்ல தமிழக அரசு தயாராக இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி)

ஏனென்றால் உங்களிடம் பெற்ற அனுமதி, உங்களிடம் பெற்ற உத்தரவு, நீங்கள் தந்த கருத்து, அந்த அடிப்படையிலே தான் நாங்கள் டெல்லியிலே சென்று இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கிறோம். உங்களை நம்பித் தான், நீங்கள் சொன்னதையேற்றுத் தான், நீங்கள் பக்கபலமாக என்றைக்கும், இந்த அரசுக்கு இருந்தால், தமிழ் நாட்டு மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் எதிர்கால நன்மைக்கு,

தமிழ்நாட்டு விவசாயிகளின் எதிர்கால துன்பத் துயரங்களைப் பற்றிக் கவலைப்பட்டு, அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு நீங்கள் என்றைக்கும் உதவிகரமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு தான் அதையேற்றுக் கொண்டு பணியாற்றினோம். அந்தப் பணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்பட்டு விடவில்லை. அந்தப் பணி முற்றுப் பெறாமல் இருக்கலாம். ஆனால் முறிந்து விடவில்லை. முறியாமல் பார்த்துக் கொண்டோம். முறியாமல் பார்த்துக் கொண்டது மாத்திரமல்ல, அதை முற்றுப் பெறும் போது முழு வெற்றி பெற்றோம் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் (மேஜையை தட்டும் ஒலி) பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இது தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இருக்கின்ற உறவு அடிப்படையிலே நடைபெறும் என்று யாராவது நம்புவீர்களேயானால் அது தவறு. இந்த நியாயத்திற்கு மத்திய அரசு தருகின்ற நியாயமான ஆதரவு என்று எடுத்துக் கொண்டால் தான் நியாயங்கள் என்றைக்கும் தோற்பதில்லை, தோற்குமேயானால் நாம் நம்மையே தியாகம் செய்து நியாயத்தை நிலைநாட்டுவோம் என்பதை மாத்திரம் தெரிவித்து மீண்டும் மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேரள அரசைக் கேட்டுக் கொள்கிறேன். கேரள முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். கேரள மாநிலத்தில் இருக்கின்ற மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் உங்களுக்குப் பகைவர்கள் அல்ல, நீங்களும் எங்களுக்குப் பகைவர்கள் அல்ல. “கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன் உதிரத்தே உதித்தெழுந்து ஒன்று பல ஆயிடினும்” என்று மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பாடிய பாட்டு, நம்முடைய மனதிலே பொதிந்திருக்கிறது, அந்த உணர்வோடு இந்தப் பிரச்சினையை கேரளத்துச் சகோதரர்களும், தமிழகத்துச் சகோதரர்களும் அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கட்சிகள் நாங்கள் இன்னும் வேகமாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அப்படித் தான் சொல்ல வேண்டும். ஏன் இப்படி வேகமாகப் போகிறீர்கள் என்று சில பத்திரிகைகள் எழுதுவதைப் போல

நீங்கள் சொல்வீர்களேயானால், யாரும் எங்களை ஆதரிக்கத் தயாராக இல்லை என்று அர்த்தம். ஒ. பன்னீர்செல்வம் ஆனாலும் அல்லது செங்கோட்டையன் ஆனாலும் அல்லது நம்முடைய சுதர்சனம் ஆனாலும் அல்லது பீட்டர் அல்போன்ஸ் ஆனாலும், நம்முடைய மணி ஆனாலும் இவர்கள் நாங்கள் போகின்ற வேகம் சரியல்ல, இன்னும் வேகமாகப் போக வேண்டும், இன்னும் வேகமாகப் பணியாற்ற வேண்டும், இன்னும் துணிச்சலாகப் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் தான் எங்களுக்கு ஊக்கம், ஏன் இவ்வளவு வேகமாகப் போகிறீர்கள் என்று நீங்கள் நியாயம் சொல்வீர்களேயானால் எங்களுக்கு கேரளத்தில் மதிப்பிருக்காது. எனவே அந்த மதிப்பை நீங்கள் எங்கள் மீது காட்டுகின்ற எதிர்ப்பின் மூலமாக நீங்கள் தருகிறீர்கள் என்று நான் அந்த எதிர்ப்பை வரவேற்கின்றேன். அப்படித் தான் இருக்க வேண்டும், எதிர்க்கட்சிகள் என்றால், இன்னும் போ, இன்னும் போ, இன்னும் வேகமாகப் போ என்று எங்களை வேகப்படுத்துங்கள் என்று இந்த முன் வரிசையில் இருக்கின்ற எல்லா தலைவர்களையும் அந்தத் தலைவர்கள் பக்கத்திலே இருக்கின்ற கட்சி நண்பர்களையும், அத்தனை பேர்களையும் முன் வரிசையிலிருந்து கடைசி வரை உட்கார்ந்திருக்கின்ற அத்தனை பேரையும் கேட்டுக் கொண்டு,

இன்று இந்தப் பொருள் பற்றி விவாதிக்கின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டமைக்காக, சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொடுத்த ஒ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு, அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.